முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2023 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

(Financial Accounting)

2023-03-04
காலை
[9.00 – 12.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**

  (1) ***காலம் :*** *03 மணித்தியாலம்*

  பக்கங்கள் : 11
  வினாக்கள் : 06

  (2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

  (3) *உங்களுக்குத் தரப்பட்டுள்ள* ***விடைப்புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே விடையளித்தல்*** *வேண்டும்.*

  (4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

  (5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

  (6) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் செவ்வை நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினைச்சொல்லைக்*** *கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் செவ்வை நிரலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

  (7) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** கீழ்வருவனவற்றில் கணக்கீட்டு வெளியீடாக (accounting output) இருப்பது எது?

(1) பேரேட்டுக் கணக்கு (2) பரீட்சை மீதி
(3) நிதி நிலைக் கூற்று (4) விற்பனை நாட்குறிப்பேடு.

**1.2** நிறுவனமொன்றினால் பின்பற்றப்படும் இருப்பு மதிப்பீட்டு முறை மீதான கணக்கீட்டுக் கொள்கையை காலப்போக்கில் மாற்றக்கூடாது. இந்தக் கூற்றுடன் தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு:

(1) அட்டுறு எண்ணக்கரு (2) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு
(3) வரலாற்றுக் கிரய எண்ணக்கரு (4) மாறாமை எண்ணக்கரு.

**1.3** **ஆன் டிரேடர்ஸ்** 2020 ஏப்ரல் 01 இல் ரூபா 5,000,000/- இற்கு மோட்டார் வாகனமொன்றைக் கொள்வனவு செய்தது. மோட்டார் வாகனங்களை குறைந்து செல்லும் மீதி முறையைப் பயன்படுத்தி, ஆண்டிற்கு 25% இல் தேய்மானம் செய்வது இந்த வணிகத்தின் கொள்கையாக உள்ளது. 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான தேய்மானத் தொகை :

(1) ரூபா 1,250,000/-. (2) ரூபா 937,500/-.

(3) ரூபா 703,125/-. (4) ரூபா 900,000/-.

**1.4** **ஜோவன் டிரேடர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரமானது ரூபா 750,000/- கிரயமான பொருள்களை ரூபா 1,000,000/- இற்கு கடனடிப்படையில் விற்பனை செய்துள்ளது. இந்த ஊடுசெயல் தொடர்பில் கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான சரியான தாக்கத்தை கீழ்வருவனவற்றிலிருந்து தெரிவு செய்க:

| | சொத்துகள் (ரூபா) | = | மூலதனம் (உரிமையாண்மை) (ரூபா) | + பரிப்புக்கள் (ரூபா) |
|---|---|---|---|---|
| (1) | -1,000,000 | = | - | -1,000,000 |
| (2) | +250,000 | = | +250,0000 | - |
| (3) | +1,000,000 | = | +250,000 | +750,000 |
| (4) | +750,000 | = | - | +750,000 |

**1.5** **ஷாம் டிரேடர்ஸின்** 2022 மார்ச் 31 இலான வங்கிக் கூற்றின் சாதகமான மீதி ரூபா 375,000/- ஆக இருந்ததுடன் இந்த மீதி காசேட்டு மீதியிலிருந்து வேறுபட்டிருந்தது. 2022 மார்ச் 31 இலான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் மற்றும் தேறாத காசோலைகள் என்பன முறையே ரூபா 15,000/- மற்றும் ரூபா 24,000/- ஆகிய பெறுமதிகளைக் கொண்டிருந்தன.

மேற்படி தகவல்களின் அடிப்படையில், **ஷாம் டிரேடர்ஸின்** ஏடுகளில் 2022 மார்ச் 31 இல் காணப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) மீதி :

(1) ரூபா 366,000/-. (2) ரூபா 336,000/-. (3) ரூபா 414,000/-. (4) ரூபா 384,000/-.

**1.6** கீழ்வரும் எந்தப் பேரேட்டுக் கணக்கினை ஒரு நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்தலாம்?

(1) விற்பனைக் கணக்கு (2) முற்கொடுப்பனவுக் கணக்கு

(3) வங்கிக் கடன் கணக்கு (4) மூலதனக் கணக்கு

**1.7** **விராஜ்** என்பவர் தனது வணிகத்திற்கான நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும்போது அவரது நிதி நிலைக் கூற்றின் தலைப்பில் **“2022 மார்ச் 31 இலானது”** எனக் குறிப்பிட்டிருந்தார். அவர் பின்பற்றியிருந்த அதிக தொடர்புடைய கணக்கீட்டு எண்ணக்கரு :

(1) காலாந்திர எண்ணக்கரு (2) பொருண்மை எண்ணக்கரு

(3) பொருத்தப்பாட்டு எண்ணக்கரு (4) அட்டுறு எண்ணக்கரு.

**1.8** வழங்குநர்களிடமிருந்து பெறப்படும் பொருள்களைப் பதிவு செய்வதற்கு கீழ்வரும் எந்த மூல ஆவணம் களஞ்சியக் காப்பாளரால் தயாரிக்கப்படுகிறது?

(1) விற்பனை விபரப்பட்டியல்
(2) பொருள்கள் பெறுவனவுச் சீட்டு (GRN).
(3) கொள்வனவுக் கட்டளை (PO).
(4) கொடுப்பனவு உறுதிச்சீட்டு.

**1.9** கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **மானெல் ஸ்டோர்ஸ்** என்ற தனியுடமை வியாபாரத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| | ரூபா |
|---|---|
| 2022 மார்ச் 31 இல் மொத்தச் சொத்துக்கள் | 7,500,000 |
| 2021 ஏப்ரல் 01 இல் மூலதனம் | 5,000,000 |
| ஆண்டின்போதான எடுப்பனவுகள் | 600,000 |
| 2022 மார்ச் 31 இல் பரிப்புக்கள் | 1,700,000 |

மேற்படி தகவல்களின் அடிப்படையில், 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம்:

(1) ரூபா 1,400,000/-. (2) ரூபா 200,000/-. (3) ரூபா 1,900,000/-. (4) ரூபா 600,000/-

**1.10** **இஷங்கா** என்பவர் தனது வணிகத்தை விரிவாக்குவதற்காக பெற்றுக் கொண்ட வங்கிக் கடனின் மூலதன மீள்கொடுப்பனவாக ரூபா 1,750,000/- இனைச் செலுத்தியுள்ளார். அவரது வணிகத்தின் பேரேட்டுக் கணக்குகளில் இந்த ஊடுசெயலைப் பதிவு செய்யும் சரியான முறை :

(1) வங்கிக் கணக்கு – வரவு மற்றும் வங்கிக் கடன் கணக்கு – செலவு.

(2) வங்கிக் கடன் கணக்கு – வரவு மற்றும் வங்கிக் கணக்கு – செலவு.

(3) வங்கிக் கணக்கு – வரவு மற்றும் மூலதனக் கணக்கு – செலவு.

(4) வங்கிக் கடன் கணக்கு – வரவு மற்றும் மூலதனக் கணக்கு – செலவு.

*கீழே* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையில் தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *எனக் குறிப்பிடுக. உமது விடையை (சரியானது / தவறானது) உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்தில் குறிப்பிடுக.*

**1.11** முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின்படி, வணிகமும் உரிமையாளர்களும் இரண்டு தனித்தனி சுயாதீன உரிமங்களாகக் கவனத்திற் கொள்ளப்பட்டு கொடுக்கல் வாங்கல்கள் ஏற்பிசைவு செய்யப்படுகின்றன.

**1.12** ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் காசு அடிப்படையிலான கொள்வனவுகளும் விற்பனைகளும் பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படுகின்றன.

**1.13** கொள்வனவுக் கணக்கானது பெயரளவுக் (nominal) கணக்குகளுக்கான ஓர் உதாரணமாகும்.

**1.14** குறித்த காலப்பகுதியொன்றின் தொடக்கத்தில் அந்தக் காலப்பகுதிக்கான செலவுகளின் பொருட்டு செலவழிப்பதற்காக பிரதான காசாளரினால் சிறு செலவுக் காசாளருக்கு வழங்கப்படுகின்ற ஒரு தொகைப் பணமானது சிறு செலவுக் காசுக் கட்டுநிதி (petty cash imprest) என அழைக்கப்படுகிறது.

**1.15** ஒரு பரிப்பு (liability) கணக்கானது பொதுவாக வரவு மீதியொன்றை கொண்டிருக்கும்.

**1.16** தொடக்கம் **1.20** *வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.16** "உரிமையாண்மை (equity)" என்னும் பதத்தை வரையறுக்குக.

**1.17** "நிதிக் கணக்கீடு" மற்றும் "முகாமைக் கணக்கீடு" ஆகியவற்றிற்கிடையிலான இரண்டு (02) வேறுபாடுகளை இனங்காண்க.

**1.18** "வணிக ஒழுக்கநெறி (Business Ethics)" என்பதால் யாது கருதப்படுகிறது என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** "விசேடத்துவமான கணக்கீட்டு மென்பெருளுக்கான (Specialized Accounting Software)" இரண்டு (02) உதாரணங்களை நிரற்படுத்துக.

**1.20** முதன்மைப் பதிவேடுகளை (Prime entry books) பேணுவதன் இரண்டு (02) முக்கியத்துவங்களை / நோக்கங்களை இனங்காண்க. (02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 02

**அனீஸ் டிரேடர்ஸ்** என்பது **அனீஸ்** என்பவரால் ரூபா 5,000,000/- இனை காசாக முதலீடு செய்து 2021 ஏப்ரல் 01 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஒரு தனியுடமை வியாபாரமாகும்.

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான காசு கட்டுப்பாட்டுக் கணக்கின் (காசேடு) பொழிப்பு கீழே தரப்பட்டுள்ளது :

**காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு)**

| பெறுவனவுகள் | வரவு (ரூபா) | கொடுப்பனவுகள் | செலவு (ரூபா) |
|---|---|---|---|
| ஆரம்ப மூலதன முதலீடு | 5,000,000 | காசுக் கொள்வனவுகள் | 2,100,000 |
| காசு விற்பனைகள் | 3,200,000 | வியாபாரக் கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 2,150,000 |
| வியாபார கடன்பட்டோரிடமிருந்தான பெறுவனவுகள் | 1,400,000 | சம்பளங்களும் கூலிகளும் | 1,300,000 |
| | | அலுவலக வாடகை | 600,000 |
| | | இயந்திரக் கொள்வனவு (2022 சனவரி 01 இல் கொள்வனவு செய்யப்பட்டது) | 3,000,000 |
| | | மின்சாரம் | 100,000 |
| | | மீதி கீ.கொ.செ. | 350,000 |
| | **9,600,000** | | **9,600,000** |
| மீதி கீ.கொ.வ. | 350,000 | | |

(2) 2022 மார்ச் 31 இல் வருமதிகளும் சென்மதிகளும் கீழ்வருமாறு :

| | ரூபா |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 1,950,000 |
| வியாபாரக் கடன் கொடுத்தோர் | 740,000 |
| அலுவலக வாடகை முற்கொடுப்பனவு | 100,000 |
| செலுத்த வேண்டிய மின்சாரக் கட்டணம் | 25,000 |

(3) இயந்திரங்கள் நேர்கோட்டு அடிப்படையில் கிரயத்தில் ஆண்டிற்கு 25% இல் தேய்மானம் செய்யப்பட வேண்டும்.

(4) 2022 மார்ச் 31 இல் எவ்வித தொக்குகளும் காணப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 மார்ச் 31 இலான **அனீஸ் டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 03

**களுவெரா பேர்னிச்சர்** என்பது சாப்பாட்டு மேசைகள் மற்றும் கதிரைகளைத் தயாரிக்கின்ற ஒரு நிறுவனமாகும். கீழ்வரும் தகவல்கள் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **களுவெரா பேர்னிச்சர்** நிறுவனத்தின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

| விபரம் | ரூபா |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு – 2021 ஏப்ரல் 01 இல் | 600,000 |
| மூலப்பொருள் கொள்வனவுகள் | 4,700,000 |
| மூலப்பொருளின் உள்வந்த வண்டிக்கூலி | 185,000 |
| 2021 ஏப்ரல் 01 இல் புத்துருவாகும் வேலைகள் | Nil |
| தொழிற்சாலை முகாமையாளரின் சம்பளம் | 680,000 |
| நேர் கூலிகள் | 600,000 |
| வாடகை | 800,000 |
| தொழிற்சாலைக் கட்டடம் மீதான காப்புறுதி | 200,000 |
| மின்சாரம் | 720,000 |
| நீர் | 300,000 |
| பொறி மற்றும் இயந்திரம் மீதான தேய்மானம் | 350,000 |
| தொழிற்சாலைக் கட்டடம் மீதான தேய்மானம் | 600,000 |

கீழ்வரும் மேலதிகத் தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் இறுதித் தொக்கு மீதிகள் கீழ்வருமாறு மதிப்பிடப்பட்டுள்ளன :

| விபரம் | (ரூபா) |
|---|---|
| மூலப்பொருள் இருப்பு – கிரயத்தில் | 650,000 |
| புத்துருவாகும் வேலை (மொத்த உற்பத்திக் கிரயத்தில் மதிப்பிடப்பட்டது) | 250,000 |

(2) கீழ்வரும் செலவினங்கள் பின்வருமாறு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் :

| செலவினம் | தொழிற்சாலை | அலுவலகம் |
|---|---|---|
| மின்சாரம் | 75% | 25% |
| நீர் | 40% | 60% |
| வாடகை | 60% | 40% |

(3) உற்பத்தி செய்யப்பட்ட தளபாடங்கள், உற்பத்திக் கிரயத்தில் 25% இலாப எல்லை வைத்து வியாபாரப் பிரிவுக்கு மாற்றப்படுகின்றன.

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **களுவெரா பேர்னிச்சர்** இன் உற்பத்திக் கிரயக் கூற்றினை (உற்பத்திக் கணக்கு) **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 04

(A) தனியுடமை வியாபாரமொன்றின் ஐந்து (5) ஊடுசெயல்களது கணக்கீட்டுச் சமன்பாட்டிற்கான தாக்கங்கள் கீழ்வருமாறு தரப்பட்டுள்ளன :

| | சொத்துக்கள் | | | | | | | = | உரிமையாண்மை (மூலதனம்) | + | பரிப்புக்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | தளபாடமும் பொருத்துகளும் | + | தொக்கு | + | வியாபாரக் கடன்பட்டோர் | + | காசு | | | | வியாபாரக் கடன் கொடுத்தோர் |
| (1) | | | | | | | + 2,000,000 | = | + 2,000,000 | | |
| (2) | + 750,000 | | | | | | (150,000) | = | | | + 600,000 |
| (3) | | | + 300,000 | | | | | = | | | + 300,000 |
| (4) | | | | | | | (450,000) | = | | | (450,000) |
| (5) | | | (145,000) | | + 180,000 | | | = | + 35,000 | | |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

மேலுள்ள கணக்கீட்டுச் சமன்பாட்டில் (1) தொடக்கம் (5) வரையான ஒவ்வொரு நிரைக்கும் சாத்தியமான ஊடுசெயல்களை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(B) 2022 மார்ச் 31 இல் **நுவான் டிரேடர்ஸ்** இன் வங்கிக் கூற்றானது ரூபா 195,000/- சாதகமான மீதியொன்றைக் காட்டியிருந்த அதே வேளை **நுவான் டிரேடர்ஸின்** காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு) ரூபா 250,000/- வரவு மீதியொன்றைக் (debit balance) காட்டியிருந்தது. **நுவான் டிரேடர்ஸ்** இன் கணக்காளர் இந்த வித்தியாசத்திற்கான காரணங்களாகப் பின்வருவனவற்றைக் கண்டறிந்துள்ளார்.

(1) வழங்கப்பட்ட நிலையியற் கட்டளை அறிவுறுத்தல்களின்படி, வங்கியானது காப்புறுதித் தவணைக் கட்டணத்திற்காக ரூபா 50,000/- இனை வரவுப் பதிவு (debited) செய்திருந்தது எனினும் இது காசேட்டில் பதியப்படவில்லை.

(2) ரூபா 120,000/- பெறுமதியான ஒரு காசோலை வங்கியில் வைப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரை அது தேறியிருக்கவில்லை.

(3) வாடிக்கையாளர் ஒருவரால் வங்கிக் கணக்கிற்கு ரூபா 38,000/- நேரடியாக வைப்பு செய்யப் பட்டிருந்தது. இது தொடர்பில் காசேட்டில் பதிவு செய்யப்படவில்லை.

(4) 2022 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கட்டணம் ரூபா 500/- ஆனது காசேட்டில் கவனத்திற் கொள்ளப்படவில்லை.

(5) வங்கியானது தவறுதலாக **நுவான் டிரேடர்ஸின்** வங்கிக் கணக்கிற்கு ரூபா 2,500/- இனை செலவுப் பதிவு (credited) செய்திருந்தது.

(6) 2022 மார்ச் 29 இல் **நுவான் டிரேடர்ஸினால்** வழங்கப்பட்ட ரூபா 75,000/- பெறுமதியான ஒரு காசோலையானது 2022 மார்ச் 31 வரை கொடுப்பனவுக்காக வங்கியில் சமர்ப்பிக்கப்படவில்லை.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக:**

(a) சீராக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு (காசேடு). (02 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான வங்கிக் கணக்கிணக்கக் கூற்று. (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

(A) **ரண்வன் டிரேடர்ஸ்** என்பது மொத்த விற்பனை வணிகமொன்றாகும். 2022 மார்ச் 31 இல் உதவிக் கணக்காளரால் தயாரிக்கப்பட்ட பரீட்சை மீதி இணங்கவில்லை. வித்தியாசம் ரூபா 139,000/- ஆனது தொங்கற் கணக்கிற்கு வரவுப் பதிவு (debited) செய்யப்பட்டு, வரைவு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டன. **ரண்வன் டிரேடர்ஸ்** வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகளுக்கான கட்டுப்பாட்டுக் கணக்குகளைப் பேணுகிறது.

அதனைத் தொடர்ந்து, கீழ்வரும் வழுக்கள் இனங்காணப்பட்டன :

(1) விற்பனை நாளேட்டு மொத்தமானது ரூபா 135,000/- அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(2) **AT கூரே லிமிட்டெட்** இடமிருந்து கடனடிப்படையில் ரூபா 117,000/- கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட ஓர் அலுவலக உபகரணம் பற்றிய பதிவானது பேரேட்டுக் கணக்குகள் இரண்டிலும் இரு தடவைகள் பதியப்பட்டிருந்தன.

(3) 2022 மார்ச் மாதத்திற்கான வாடகைச் செலவினம் ரூபா 65,000/- ஆனது வாடகை வருமானக் கணக்கில் செலவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது. இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(4) தொலைபேசிச் செலவினம் ரூபா 65,000/- ஆனது காசுக் கணக்கில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும், தொலைபேசிச் செலவினக் கணக்கில் ரூபா 56,000/- ஆக வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

(5) ரூபா 220,000/- கிரயமுடைய தளபாடக் கொள்வனவானது பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புக் கணக்கில் வரவுப் பதிவு செய்யப்பட்டிருந்த அதே வேளை, இது காசேட்டில் சரியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) மேலுள்ள வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகள் (05 புள்ளிகள்)

(b) தொங்கற் கணக்கு (02 புள்ளிகள்)

(B) 2022 ஏப்ரல் மாதத்திற்கான **சக்தி டிரேடர்ஸின்** கீழ்வரும் தகவல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன:

| **விபரம்** | **கிரயம் (ரூபா)** |
|---|---|
| 2022 ஏப்ரல் 01 இல் வியாபார வருமதிகள் (கடன்பட்டோர்) மீதி | 5,500,000 |
| மாதத்திற்கான விற்பனை நாளேட்டு மொத்தம் | 3,650,000 |
| மாதத்திற்கான காசு விற்பனை | 2,350,000 |
| மாதத்திற்கான விற்பனைத் திரும்பல் நாளேட்டு மொத்தம் | 500,000 |
| மாதத்தின் காலப்பகுதியில் வியாபார வருமதியாளர்களிடமிருந்து கிடைத்த காசு | 1,800,000 |
| மாதத்தின் காலப்பகுதியில் பதிவழிக்கப்பட்ட அறவிட முடியாக் கடன்கள் | 10,000 |

**நீங்கள் செய்ய வேண்டியது :**

2022 ஏப்ரல் மாதத்திற்கான வியாபார வருமதிகள் கட்டுப்பாட்டுக் கணக்கைத் **தயாரிக்குக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**அமல் டிரேடர்ஸ்** என்பது **அமல்** என்பவருக்குச் சொந்தமான ஒரு தனியுடமை வியாபாரமாகும். 2022 மார்ச் 31 இலான **அமல் டிரேடர்ஸின்** பரீட்சை மீதி கீழ்வருமாறு :

**அமல் டிரேடர்ஸ்**

**2022 மார்ச் 31 இல் பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| விபரம் | வரவு | செலவு |
|---|---|---|
| பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் : | | |
| இயந்திரம் | 3,000 | |
| கணினிகள் | 1,800 | |
| 2021 ஏப்ரல் 01 இல் திரள் தேய்மானம் : | | |
| இயந்திரம் | | 1,500 |
| கணினிகள் | | 450 |
| விற்பனைகள் | | 252,000 |
| கொள்வனவுகள் | 177,000 | |
| கொள்வனவுகள் மீதான இறக்குமதித் தீர்வை | 1,500 | |
| வியாபார வருமதிகள் | 20,200 | |
| வியாபார சென்மதிகள் | | 6,000 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 85 | |
| 2021 ஏப்ரல் 01 இல் தொக்கு | 12,150 | |
| நீர் | 150 | |
| மின்சாரம் | 3,450 | |
| சம்பளங்களும் கூலிகளும் | 45,000 | |
| அலுவலக வாடகை | 6,000 | |
| போக்குவரத்துச் செலவினங்கள் | 4,800 | |
| செலுத்திய வங்கிக் கடன் வட்டி | 1,200 | |
| தொலைபேசி மற்றும் இணைய இணைப்புக் கட்டணங்கள் | 500 | |
| 2021 ஏப்ரல் 01 இல் மூலதனக் கணக்கு | | 11,385 |
| வங்கிக் கடன் | | 5,500 |
| **மொத்தம்** | **276,835** | **276,835** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட இறுதித் தொக்கு ரூபா 7,750,000/-.

(2) 2022 சனவரி 01 இல், **அமலுக்குச்** சொந்தமான ரூபா 2,000,000/- பெறுமதியான விநியோக வேன் ஒன்று வியாபாரத்திற்கு மாற்றப்பட்டது எனினும் அது தொடர்பில் **அமல் டிரேடர்ஸின்** கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) வியாபாரத்தின் கொள்கையானது கீழ்வருமாறு கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்வதாகும் :

| | | |
|---|---|---|
| இயந்திரம் | : | ஆண்டிற்கு 20% |
| கணினிகள் | : | ஆண்டிற்கு 25% |
| மோட்டார் வாகனங்கள் | : | ஆண்டிற்கு 25% |

(4) 2022 மார்ச் மாதத்திற்கான மின்சாரக் கட்டணம் ரூபா 75,000/- மற்றும் நீர் கட்டணம் ரூபா 22,000/- என்பன 2022 மார்ச் 31 வரை செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(5) பொருளாதார நெருக்கடி காரணமாக, வாடிக்கையாளர் ஒருவர் வங்குரோத்து நிலையை அடைந்தவராக பிரகடனப்படுத்தப்பட்டதுடன் அவரிடமிருந்து வசூலிக்க வேண்டியிருந்த ரூபா 75,000/- மீதியினை அறவிட முடியாக் கடனாகப் பதிவழிப்புச் செய்வதற்கு **அமல்** தீர்மானித்திருந்தார்.

(6) 2022 மார்ச் மாதத்திற்கான வங்கிக் கடன் மீதான வட்டி ரூபா 100,000/- ஆக இருந்ததுடன் அது 2022 ஏப்ரலில் செலுத்தப்பட்டது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

பின்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (11 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று (09 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |